DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | இருளாயி (PW.8) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது பாதனகுறிச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் விறகு வெட்டும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 3வருடத்திற்கு முன்பு எங்கள் ஊர் நாடக மேடை அருகே இரவு 9.00மணியளவில் நானும், போத்தனேரியைச் சேர்ந்த பாலமுருகன் என்பவரும் நின்று பேசிக் கொண்டிருந்தபோது வீரசோழன் போலிசார் இந்த இடத்தில் நடந்ததா என்று கேட்டார்கள். நாங்கள் வெளியூர்க்காரர்கள் என்பதால் சண்டை பற்றி தெரியவில்லை என்று சொன்னோம். போலிசார் சண்டை நடந்ததற்காக வந்து சென்றதற்காக கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும் பாலமுருகனும் கையொப்பம் செய்தோம். (**அந்த பார்வை**

**மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 07.08.2023ம் தேதி இரவு 9.00மணியளவில் நானும், பாலமுருகன் என்பவரும் எங்கள் ஊர் நாடகமேடை அருகே நின்று பேசிக் கொண்டிருந்தபோது அங்கு வந்து வீரசோழன் காவல்நிலைய போலிசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் நானும் பாலமுருகன் என்பவரும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution / Defence

| | | |
|---|---|---|
| Name | : | மாகாளி (PW.7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது புளியாண்டார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 3வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் எனது ஊரில் உள்ள வாட்டர் டேங்க் அருகே நான் இருந்தபோது மாலை 5.30 மணியளவில் ஜெயபிரியாவிற்கும், வேலுவிற்கும் வாய்தகராறு ஏற்பட்டது. பழனிச்சாமியும், முருகனும் வந்து வேலுவைப் பார்த்து ஏன் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். உடனே அங்கிருந்த ராமசாமி என்பவர் கம்பை வைத்து பழனிச்சாமியை கழுத்திலும், முருகனை முதுகிலும் அடித்தார். பழனிச்சாமி கீழே விழுந்துவிட்டார். உடனே வேலு மகன் கருப்புராஜ் செருப்பு காலால் பழனிச்சாமியை மிதித்தார். 20 மீ துாரத்தில் நின்று கொண்டிருந்த

முருகனின் மனைவி சுமதியை ராமசாமி கம்பை வைத்து உச்சந்தலையில் அடித்தார், ரத்தம் வந்தவுடன் அருகில் இருந்த பெண்கள் அவரை அழைத்துச் சென்றுவிட்டார்கள். அருகில் இருந்த நான், பிரபு, தனிக்கொடி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம். 108 ஆம்புலன்ஸ்–ல் காயம்பட்டவர்களை அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No.154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | தனிக்கொடி (PW.6) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of June 2026

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது புளியாண்டார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 3வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் மாலை 5.30 மணியளவில் எங்கள் ஊர் நாடகமேடை முன்பு சத்தம் கேட்டது. நான் அந்த இடத்திற்கு சென்றபோது என்னை எனது குடும்பத்தார்கள் விடவில்லை. அதன்பிறகு இரவு 7.00மணியளவில் 108 ஆம்புலன்ஸ்–ல் சுமதி என்பவரை அழைத்துச் சென்றார்கள். என்னவென்று எனது மனைவியிடம் கேட்டபோது சுமதியை மண்டையை உடைத்து அழைத்து செல்வதாக கூறினார். வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 20.06.2023ம் தேதியன்று மாலை 6.00மணியளவில் எனது ஊரில் உள்ள நாடகமேடை அருகே நான் உட்கார்ந்து கொண்டிருந்தபோது எனது ஊரைச் சேர்ந்த மாரி என்பவர் வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் நாடகமேடை அருகே விளையாடிக் கொண்டிருந்தார் என்றும், அப்போது அதன் வழியாக கடைக்கு சென்ற பிரியா என்ற ஜெயபிரியாவை மாரி அவரது மகனை சத்தம் போட்டார் என்றும், அப்போது மாரிக்கும், ஜெயபிரியாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும், அப்போது அங்கு வந்த மாரியின் கணவர் வேலு ஜெயபிரியாவை அசிங்கமாக பேசி வலி மறித்து கையால் அடித்து நெஞ்சை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், அப்போது அங்கு வந்த சுமதி என்பவர் எனது தங்கையிடம் ஏன் சண்டைபோடுகிறாய் என்று கேட்டபோது மாரி தலைமுடியைப் பிடித்து கையால் அடித்தார் என்றும், அப்போது சண்டையை விலக்கிவிட வந்த பானுபிரியாவை அடித்தார் என்றும், அதன்பிறகு முருகன் என்பவர் வாதியின் தலையில் கல்லை வைத்து அடித்தார் என்றும், சம்பவத்தை கேள்விபட்டு வந்த வேலுவை முருகனும், பழனிச்சாமியும் கையால் அடித்தார்கள் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த நானும் எனது ஊரைச் சேர்ந்த ராக்கு, மகாலி, பிரபு ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும் அப்போது இன்னைக்கு தப்பிவிட்டீர்கள் என்னைக்கு இருந்தாலும் எங்கள் கையால்தான் சாவு என்று மிரட்டிச் சென்றார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.